செய்தி வெளியீடு எண் : 1492 நாள் : 27.07.2023

## <u>செய்தி வெளியீடு</u>

**வேளாண்மை –உழவர் நலத்துறை சார்பில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் – 2023" விழாவில், வேளாண் செயல்பாடுகள் குறித்த கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, பாரம்பரிய நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (27.7.2023) திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் 2023" விழாவில், வேளாண் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, பாரம்பரிய நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கி வாழ்த்தினார்.

2023–24 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை–உழவர் நலத்துறையின் மானிய கோரிக்கையில், நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வினை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில் மாநில அளவில் வேளாண் கண்காட்சி திருச்சியில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, உயர் விளைச்சல் தரவல்ல புதிய இரகங்கள், பாரம்பரிய நெல் இரகங்கள், வருமானத்தை பெருக்க வேளாண் நவீன தொழில்நுட்பங்கள், உத்திகள், நவீன வேளாண் இயந்திரங்கள், சூரியசக்தி மூலம் இயங்கும் கருவிகள்,செயல் விளக்கங்கள், விளை பொருட்களை மதிப்புக் கூட்டும் முறைகள், தொழில்நுட்பங்கள், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன், பட்டுப்பூச்சி வளர்ப்பு குறித்தான கருத்தரங்குகள், உழவன் செயலி பதிவிறக்கம், திட்டபலன் முன்பதிவுகள்

போன்ற வேளாண்மை தொடர்புடைய நிகழ்வுகளை உள்ளடக்கிய, "வேளாண் சங்கமம் – 2023" கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்தார். இக்கண்காட்சி ஜூலை 27 முதல் ஜூலை 29 வரை திருச்சிராப்பள்ளி, கேர் பொறியியல் கல்லூரியில் நடைபெறும்.

வேளாண்மை – உழவர் நலத்துறையினால் நடத்தப்படும் இக்கண்காட்சியில், வேளாண்மைத் துறை, தோட்டக்ககலை மற்றும் மலை பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல், சர்க்கரைத் துறை, விதைச்சான்று மற்றும் அங்கக சான்று துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்), கைத்தறித்துறை, தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித்துறை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியனவும், ஒன்றிய அரசின் ஆராய்ச்சி நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும், ஒன்றிய அரசின் பயிர் வாரியங்களும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மீன் வளப் பல்கலைக்கழகங்களும் பங்கேற்றுள்ளன. .

மேலும், இக்காண்காட்சியில் நுண்ணீர் பாசன நிறுவனங்கள், உர நிறுவனங்கள், வேளாண் இயந்திர நிறுவனங்கள், விதை நிறுவனங்கள், வங்கிகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பல்வேறு தனியார் நிறுவனங்களும், அரசுத் துறைகளும் இணைந்து வேளாண் செயல்பாடுகள் சார்ந்த இடுபொருட்கள் செயலாக்கத்துடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, உழவர்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களான கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மின்னணு வேளாண்மை, இயற்கை வேளாண்மை, சீர்மிகு சிறுதானியம்,

தென்னை, பயிர் பாதுகாப்பு முறைகள், பாரம்பரிய இரகங்கள், பசுமைக்குடில், செங்குத்து தோட்டம், நீரியல் தோட்டம், மாடித் தோட்டம், வேளாண் இயந்திரமயமாக்குதல், மதிப்பு கூட்டுதல் போன்றவற்றை முன்னிலைப்படுத்தும் சிறப்பு கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண் சார்ந்த புதிய நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், வேளாண்மை–உழவர் நலத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களை எடுத்துரைக்கும் விதமாகவும் பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு கருதரங்குகளும் நடத்தப்படுகின்றன.

இக்கண்காட்சியின் முத்தாய்ப்பாக, விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகள், நாற்றுக்கள், உயிர்உரங்கள் போன்ற வேளாண் இடுபொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை வாங்கவும், உழவன் செயலி பதிவிறக்கம், திட்டப்பதிவு மையம், தமிழ் மண்வள இணையதளம் மூலம் மண்வள அட்டை வழங்குதல் போன்ற இணையவழி சேவைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஒருங்கிணைந்த பண்ணையம், நுண்ணீர் பாசனம், நடமாடும் மண் ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றை செயல்விளக்கங்கள் மூலம் விவரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சி நடத்தப்படவுள்ள மூன்று நாட்களில் சுமார் 50,000 விவசாயிகள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்த பின்னர், பாரம்பரிய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற்ற 3 விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கிடும் விதமாக, முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம், திரு.ரங்கசாமி சார்பாக அவர் மனைவி திருமதி வீரம்மாள் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், இரண்டாம் பரிசு பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திரு.மு.சரவணன் அவர்களுக்கு 75,000 ரூபாய்க்கான காசோலையும், மூன்றாம் பரிசு பெற்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி அவர்களுக்கு 50,000 ரூபாய்க்கான காசோலையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.

இவ்விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம். ஆர். கே. பன்னீர் செல்வம், மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ். சிவசங்கர், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. உ. மதிவாணன், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திரு. மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ். இனிகோ இருதயராஜ், திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. செ. ஸ்டாலின் குமார், திரு. ந. தியாகராஜன், திரு. எம். பழனியாண்டி, திரு.பி. அப்துல் சமது மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் மரு. (திருமதி) பீலா ராஜேஷ், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தா தேவி, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. பிரதீப் குமார், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

……………..

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**